**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.**

**OS.94/2021**

09.09.2025

**PW-1**

**வா.சா.1. கலைச்செல்வி, க/பெ. சுப்ரமணியன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

எனது கணவர் மற்றும் அவரது சகோதரர்களுக்கு நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து நிலங்களுக்கு அருகே வேறு நிலங்கள் உள்ளது என்றால் - சரிதான். அவரவர் பாகம் செய்ததில் எனது கணவருக்கு கிடைத்த சொத்தில் அவர் சாகுபடி செய்கிறார் என்றால் - சரிதான் அந்த நிலங்களில் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் -தெரியாது. தாவா சொத்து நிலத்திற்கு போர் பாசனமா அல்லது ஆற்று பாசனமா என்றால் - இரண்டுமே உண்டு. தாவா சொத்திற்கு நான்கெல்லை எனக்கு தெரியாது. எவ்வளவு சொத்து குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் - 2.1/2 ஏக்கர் நிலம். எனது வாக்குமூலத்தில் ரவியும் அவரது மனைவியும் சேர்ந்து எனக்கும் எனது கணவருக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் - இல்லை. பிரமாண பத்திரத்தில் எனக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதாக நான் சொல்லியுளளேன் என்றால் - எனது வழக்கறிஞருக்கு அனுப்பியிருப்பார். அது பற்றிய விவரம் எதுவும் எனக்கு தெரியாது. அதில் மறுக்கப்பட்டுள்ள விவரங்களும் எனக்கு தெரியாது என்றால் - சரிதான். 2016 ம் ஆண்டுக்கு முன்பு வழக்கு சொத்து எங்கள் அனுபவத்தில் உள்ளது என்பதற்கு ஆதாரமாக எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரியல்ல. 2016 க்கு முன்பு வரை எனது நேரடி அனுபவத்தில் இருந்தது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சொத்து எனது அனுபவத்தல் இல்லை என்றாலும் - சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி எனது கணவரிடம் 29.08.2003 ல் ஒரு கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் - சரியல்ல. அதன் மொத்த கிரய தொகையாக ரூ.1 இலட்சத்து 66 ஆயிரம் என்று பேசி முடிவு செய்து கிரய ஒப்பந்த தேதியிலேயே ரூ.1 இலட்சத்து 40 ஆயிரம் எனது கணவர் பெற்றுக்கொண்டார் என்றால் - சரியல்ல. கிரய ஒப்பந்த காலத்திலேயே ரவி வசம் என் கணவர் சுவாதீனத்தை ஒப்படைத்து ரவி தான் தற்போது வரை சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் - சரியல்ல. வழக்கு சொத்து கிரய ஒப்பந்தம் தேதியில் அசல் பத்திரம் எனது கணவர் வங்கியில் அடமானம் வைத்திருந்ததால் உடனடியாக கிரய பத்திரம் பதிவு செய்ய முடியவில்லை என்றால் - சரியல்ல. மேற்படி விவரம் எனது கணவருக்கு தான் தெரியும் என்றால் - வங்கியில் கடனே வாங்கவில்லை. வழக்கிற்காக தற்போது கடன் வாங்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் - சரியல்ல. வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகள் வழக்கிற்காக கற்பனையாக உருவாக்கப்பட்டது என்றால் - சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் - சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.